## உங்கள் வியாபாரத்துக்கு இது ஏன் முக்கியமானது?

வலுவை சேமிப்பதனூடாகவும் சூழலுக்கு நட்பான தெரிவுகளை இனங்கண்டும் புதுப்பிக்கத்தக்க வலுவில் முதலீடுகளை மேற்கொண்டும் உங்கள் வியாபாரத்தை நிலைபேறானதாக்கிக் கொள்ளுங்கள். தனித்த வலு மூலத்தில் தங்கியிருப்பதை தவிர்த்துக் கொள்வதுடன், எதிர்பாராத தடங்கல்களிலிருந்து உங்கள் வியாபாரத்தை பாதுகாத்துக் கொள்ளவும்.

வலு பாவனையை குறைப்பது மற்றும் வலுச் சிக்கனமான சாதனங்களையும் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தி, உங்கள் வியாபாரத்துக்கு நிதியளவிலும் சூழல்சார் ரீதியிலும் பயன்களை ஏற்படுத்துங்கள்.

## வலுவை சேமிப்பதற்கு உங்களால் மேற்கொள்ளக்கூடிய இதர செயற்பாடுகள்

- இலத்திரனியல் சாதனங்கள் தொடர்பில் பட்டியலிட்டு, அவற்றின் பயன்படுத்தல் காலம் மற்றும் உங்கள் மின்சார கட்டண பட்டியல்கள் தொடர்பில் ஒப்பிடவும்.
- முறையான காற்றோட்டத்தை கொண்டிருப்பதுடன், வாயு குளிரூட்டிகளை உரிய காலங்களில் பராமரிப்பு சேவைகளுக்கு உட்படுத்தி அவற்றை துப்புரவு செய்து கொள்ளவும்.
- உங்கள் இணையத்தளம், சமூக ஊடக கட்டமைப்புகள், ஹோட்டல் வரவேற்பு பகுதி மற்றும் விருந்தினர் அறைகளிலுள்ள கோவைகளில் உங்களின் சூழலுக்கு நட்பான செயற்பாடுகளை பற்றிக் குறிப்பிடவும்.
- பொது பிரதேசங்களில் இருப்பிட மற்றும் நடமாடல் உணரிகளை பொருத்தவும்.
- சாதனங்களை மாற்றும் போது, பிந்திய மற்றும் சிக்கனமான மாற்றீடுகளை தெரிவு செய்யவும்.
- உங்கள் கட்டிட வடிவமைப்பில் இயற்கை காற்றோட்டம் மற்றும் குளிரவைப்பு முறைகளை ஒன்றிணைக்கவும்.
- வலுச் சிக்கனமான சாதனங்களில் முதலிடல்.

சூரிய மின் கட்டமைப்பில் PV (photovoltaics) முதலீடு செய்வதனூடாக, 3.5 வருட காலப்பகுதியினுள் முதலீடு செய்த தொகையை மீள பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன், வருடமொன்றில் 8.5 டொன்கள் வரை பச்சைஇல்ல வாயுகள் வெளியேற்றத்தை குறைத்துக் கொள்ள முடியும்.

உங்களின் வலு நுகர்வை 10% இனால் குறைப்பதனூடாக, முழு சேவை ஹோட்டல் ஒன்றின் சராசரி தினசரி அறைக் கட்டணத்தை (ADR) $1.35 இனால் அதிகரிப்பதால் பெற்றுக் கொள்ளக்கூடிய நிதிசார் வருமானத்தை உங்கள் வியாபாரத்துக்கு பெற்றுக் கொள்ளலாம் என்பது அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டிருந்தது.

### Learn more

Resources from the Sri Lanka Sustainable Energy Authority

Energy Savings Tips for Small Businesses: Home-Based Businesses

22 ways to save energy in the workplace

**நீங்கள் இல்லை என்றால், யார்?இன்றே செயல்படுங்கள் 👉 நிலைத்தன்மையை சிந்தியுங்கள் 🌏**


USAID Indo-Pacific Opportunity Project (IPOP)
International Development Group LLC

56/6A Horton Place
Colombo 7, Sri Lanka
Tel: 94-112697052


USAID FROM THE AMERICAN PEOPLE

# வலு சேமிப்பதற்கு உங்களால் என்ன செய்ய முடியும்




வலுச் சிக்கனமான ஏற்பாடுகளை நிறுவி மற்றும் நடத்தைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி தமது மின் கட்டணங்களில் 18-25% குறைவை சராசரியான சிறு வியாபாரங்களுக்கு ஏற்படுத்திக் கொள்ள முடியும்

USAID
FROM THE AMERICAN PEOPLE

# மின்சாரத்தை சேமிக்க என்ன செய்யலாம்




1 A/C பயன்பாட்டில் இருக்கும் போது வெப்பநிலையை 24 டிகிரி செல்சியஸ் இயல்புநிலைக்கு வைக்கவும்

2 A/C பயன்பாட்டில் இருக்கும் போது ஜன்னல்களை மூடி வைக்கவும்

3 சுற்றுப்புறத்தை குளிர்விக்க நிழல் தரும் உள்நாட்டு மரங்களை வளர்க்கவும்



4 பயன்பாட்டில் இல்லாத போது கணினிகள் மற்றும் மின்சார உபகரணங்களை முடக்கி, மின்சார விநியோகத்தை துண்டிக்கவும்

5 மின்சார உபகரணங்களை மாற்றும் போது நவீன மற்றும் திறமையான மாற்றுகளைத் தெரிவு செய்யவும்

6 சாதாரண மின் விளக்குகளை LED விளக்குகளாக மாற்றவும்

7 சுற்றுலா பயணிகள் தங்கியிருக்கும் போது ஆற்றல் சேமிப்பு நடைமுறைகளைப் பற்றி அவர்களுக்குக் கற்பிக்கவும்

8 எரிபொருளைச் சேமிக்க வாகனப்பயணங்களின் எண்ணிக்கையை குறைக்கவும் அல்லது பல பயணங்களை ஒரு பயணமாக இணைக்கவும்



ஃப்ளோரசன்ட் மற்றும் மின் குமிழிகளை விட LED விளக்குகள் 80% அதிக திறன் கொண்டவை என்பது உங்களுக்குத் தெரியுமா?

இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபையின் (SLSEA) படி, ஒரு நாளைக்கு 4 மணிநேரத்திற்கு 75W சாதாரண மின்குமிழியைப் பயன்படுத்துவது, 9W LED விளக்கை பயன்படுத்துவதை விட மாதத்திற்கு ரூ75.25 அதிகமாகும்.

A/C களில் வெப்பநிலையை 1 டிகிரி செல்சியஸ் குறைப்பதால், குளிர்விப்பதற்கான ஆற்றல் செலவு 4% அதிகரிக்கின்றது.